அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 10/2012(IV)

எனது இலக்கம் :CS/DOS/Policy/06
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2020.09.18

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
மாகாண சபை பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
பிரதேச செயலாளர்களுக்கு

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணத்தை நடைமுறைப்படுத்துதல்</u>**

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2012.05.08 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2012, 2012.06.21ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2012(I), 2016.04.04 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2012(II) மற்றும் 2017.08.14ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2012(III) ஆகியவற்றை தங்களது கவனத்துக்கு தயவுடன் கொண்டு வருகின்றேன்.

02. 2017.08.14ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2012(III) இன் 02 மற்றும் 03 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளுக்கு கட்டுப்பட்டு உள்ளீர்ப்புச் செய்வதற்காக விருப்பம் தெரிவிக்க முடியுமான இறுதித் திகதி 2020.11.30ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அத்திகதிக்கு முன்னர் உள்ளீர்ப்புச் செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ள சகல உத்தியோகத்தர்களினதும் சுயவிபரக் கோவை 10/2012 சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டு 2020.12.31ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

03. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி 2017.09.30ஆந் திகதியின் பின்னர் விருப்பத்தைத் தெரிவிப்பதற்கு நாடும் உத்தியோகத்தர்களுக்கு (தற்சமயம் ஒழுக்காற்று விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தவிர்ந்த) அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்காக இதன் மூலம் வாய்ப்பளிக்கப்படுகின்றது.

04. மேலும், அபிவிருத்தி உத்தியோகத்தர் **சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ள உத்தியோகத்தர்களுக்கு அவ்விண்ணப்பங்களிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்க முடியாதுள்ளது** என்பதனை தயவுடன் அறியத்தருவதோடு, அவ்வனைத்து உத்தியோகத்தர்களும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையினுள் உள்ளீர்ப்புச் செய்யப்படுவார்கள்.

ஒப்பம்/. ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு